பக்கங்கள்: 06

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 04 ஞாயிற்றுக்கிழமை 20.09.2020 கதிர் 185

## கொரோனா 3,283 குணமடைவு 3070

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் 200 பேர் மாத்திரமே தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 2

# கண்டியில் இடிந்து விழுந்தது 5 மாடிக் கட்டடம்

# தந்தை, தாய், குழந்தை நசியுண்டு பரிதாபப் பலி



கண்டி, செப்ரெம்பர்20

சீரற்ற காலநிலையால் கண்டியில் இன்று இடம்பெற்ற அனர்த்தத்தில் ஒன்றரை மாதப் பச்சிளம் குழந்தையும், அக்குழந்தையின் தாய், தந்தையும் பரிதாபகரமாகப் பலியாகியுள்ளனர்.

கண்டி - பூவெலிகட சங்கமித்த மாவத்தையில், இன்று அதிகாலை 5 மணியளவில் ஏற்பட்ட தாழிறக்கச் சம்பவத்தில் 5 மாடிக் கட்டடம் இடிந்து விழுந்துள்ளது. இந்தக் கட்டடத்துக்கு அருகில் இருந்த 2 வீடுகளும் நிர்மூலமாகியுள்ளன. 2

## 13 ஆவது திருத்தத்தை ஒருபோதும் ஒழிக்கோம்

### அமைச்சர் பிரசன்ன 'பல்டி'

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் ஒருபோதும் இரத்துச் செய்யப்படமாட்டாது.

- இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மாகாண சபைகள் ஊடாக அரச சேவைகள் முறையாக இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

மாகாண சபைகள் ஊடாக அரச சேவைகள் முறையாக இடம்பெறுகிறன. ஒரு சில மாகாண சபைகளில் குறைப்பாடுகள் காணப்படுகின்றன. அவை திருத்தம் 2

## அமைச்சுக்களில் அதிரடி மாற்றம் தயாராகிறார் ஜனாதிபதி கோட்டா

அமைச்சுக்களின் பெயர்கள் மற்றும் விடயதானங்களில் மாற்றத்தை ஏற்படுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தேசித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் விடயதானங்களிக் சிலவற்றை இராஜாங்க அமைச்சுக்களுக்கு அவர் பகிரவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

அதேபோல சில இராஜாங்க அமைச்சுக்களின் பெயர்களில் மாற்றத்தைக் கொண்டுவரவும் அவர்



எதிர்பார்த்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் அடுத்த வாரத்தில் இந்த மாற்றங்கள் நிகழலாம் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மழையுடன் மண்சரிவு மக்களுக்கு எச்சரிக்கை

### வளிமண்டலவியல் திணைக்களம்

மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் வட மேல் மகாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில பகுதிகளிலும் மழை மற்றும் காற்றுடன் கூடிய வானிலை தொடர்ந்து நிலவக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. 2

## 20 இல் சு.கவுக்கு திருப்தியில்லை!

### திருத்தம் வேண்டும்; தயாசிறி வலியுறுத்து

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சில விடயங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது எமது பொதுவான நிலைப்பாடாகும். எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்படுகின்ற குழுவின் அறிக்கைக்கு அமையவே எமது உத்தியோகபூர்வ நிலைப்பாடு அறிவிக்கப்படும். 2

## முல்லைத்தீவுக் கடற்கரைப் பகுதிகளை சுத்தம் செய்த பட்டதாரிப் பயிலுனர்கள்!



நியமனம் பெற்ற பட்டதாரி பயிலுநர்களுக்கான படையினரின் பயிற்சிகள் கடந்த 14 ஆம் திகதி தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கேப்பாபிலவு 59 ஆவது படைப்பிரிவின் பயிற்சி முகாமில் முல்லைத்தீவு 2

## இலங்கைக்குப் படகில் கடத்த முயன்ற மஞ்சள் மூடைகள் பாம்பனில் சிக்கின!

### பைபர் நாட்டு படகுடன் மூவர் கைது

பாம்பன்,செப்.20

தமிழகம் தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து பாம்பன் கடல்வழியாக இலங்கைக்கு படகில் கடத்த முயன்ற தடைசெய்யப்பட்ட கடல் அட்டைகள், சமையல் மஞ்சள் அடங்கிய 22 மூடைகளை நடுக்கடலில் பறிமுதல்செய்து மீனவர்களையும் மெரைன் பொலிஸார் கைது செய்தனர்.

பாம்பன் பாலம் கடல் வழியாக வெளி மாவட்ட படகு ஒன்றில் இலங்கைக்குக் கடத்தல்பொருள்கள் அனுப்பப்படஉள்ளன என மெரைன் பொலிஸாருக்குக் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் குந்துக்கால் கடற்கரையில் இன்று காலை முதல் ரோந்து பணியில் அவர்கள் ஈடுபட்டனர்.

அப்போது பாம்பன் குந்துகால் கடலில் பைபர் நாட்டு படகு ஒன்று இயந்திரப் பழுதாகி நின்று கொண்டிருந்தது. ரோந்து பணியில் இருந்த மெரைன் பொலிஸார் படகில் உள்ள மீனவர்களிடம் விசாரணை நடத்தியதில் மீனவர்கள் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்துள்ளனர். இதனால் சந்தேகம் அடைந்த பொலிஸார் படகில் ஏறி சோதனை செய்த 2

## குணமடைந்து வீடு திரும்பி இருந்த இளைஞருக்கு மீண்டும் கொரோனா

வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று குணமடைந்து வீடு திரும்பிய இளைஞர் ஒருவருக்கு மீண்டும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிலாபம், ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தில் கொரோன வைரஸ் தொற்றுக்குள்ளாகி பூரணமாகக் குணமடைந்து வீடு திரும்பியவருக்கே மீண்டும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

23 வயதுடைய குறித்த நபர் கடந்த மாதம் 16 ஆம் திகதி டுபாயில் இருந்து இலங்கைக்குத் திரும்பியிருந்த நிலையில், கொரோனாத் தொற்று உறுதிப்பட்ட காரணத்தால் வெலிகந்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். 2

## விடுதலைப் பயணத்தில் உயிர்நீத்தோரை நினைவு கூர்வது அடிப்படை உரிமை!

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு



விடுதலைக்கான பயணத்தில் உயிர்நீத்தவர்களை நினைவுகூருவது அடிப்படை உரிமையாகும் என்றும் அதனை யாரும் தடுக்க முடியாது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அதேநேரம், உரிமைகள் மறுக்கப்படும் சந்தர்ப்பங்களில் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒருங்கிணைத்து பலமான செயற்பாடுகளை முன்னெடுக்கும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் செயற்பாடுக்கு அவர் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

தியாக தீபம் திலீபனின் 33 ஆவது ஆண்டு நினைவுகூரலுக்கு வடக்கு கிழக்கில் நீதிமன்றங்களின் ஊடாக தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் தமிழ் ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் இவ்விதமான விடயங்களில் எம்மிடையே ஒற்றுமை மிகவும் முக்கியமானது என சுட்டிக்காட்டிய இரா.சம்பந்தன் தொடர்ச்சியாக 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கிளிநொச்சி கலைஞர்களின் நாடகம் 13 தேசிய விருதுகளை வென்றுள்ளது



கிளிநொச்சி கலைஞர்களின் 'மண் குளித்து' நாடகம் 2020ம் ஆண்டின் சிறந்த நெடுநாடகமாக முதல் இடத்தைப் பெற்றதுடன், 8 பிரிவுகளில் 13 தேசிய விருதுகளை வென்றது.

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச நாடக குழு இணைந்து 2020 ஆம் ஆண்டின் 48 ஆவது அரச நாடக விழா கடந்த பெப்ரவரி மாதம் நடத்தியிருந்தது.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மாணவர்களால் அரங்கேற்றப்பட்ட 'மண் குளித்து' என்ற நாடகம் கடந்த 26.02.2020 அன்று எல்பிஸ்டன் திரையரங்கில் போட்டிக்காக அரங்கேறியது.

இந்த போட்டி நிகழ்வு மூன்று சுற்றுக்களாக இடம்பெற்றன. இந்த நாடக போட்டிக்காக இவ்வருடம் 32 குறுநாடக பிரதிகளுடன் 20 நெடுநாடக பிரதிகளும் போட்டிக்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்தன.

இவற்றில் 5 குறுநாடகங்களுடன் 2 நெடுநாடகங்களும் இறுதி சுற்றுக்கு தெரிவாகியிருந்தன. இறுதி சுற்றின் போட்டி முடிவுகள் அறிவிக்கும் நிகழ்வு 11.09.2020 அன்று மாலை 6 மணிக்கு கொழும்பு தாமரைத்தடாகம் கலையரங்கில் பிரமாண்டாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி கலைஞர்களால் அரங்கேற்றப்பட்ட அருணாசலம் சத்தியானந்தன் மற்றும் பிரதீப்ராசா ஆகியோரின் நெறியாள்கையில் உருவான 'மண்குளித்து' நாடகம் ஆண்டின் சிறந்த நெடுநாடகமாக முதல் இடத்தை பெற்றுக் கொண்டது. 8 பிரிவுகளில் 13 தேசிய விருதுகளையும் இந்த குழு பெற்றுக்கொண்டமை விசேட அம்சமாகும்.

சிறந்த தயாரிப்பு, இயக்கம், நாடக நயனம், ஒளியமைப்பு, இசை, நடிப்பு, அரங்க முகாமைத்துவம், சிறந்த நாடக எழுத்துருவாக்கம் ஆகியவற்றுக்கு தேசிய விருதுகள் கிடைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நாடகமானது கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி 50 இற்கு மேற்பட்ட கலைஞர்களுடன் போட்டியிட்டிருந்தது. 48 வருட தேசிய நாடக விழா மரபில், கிளிநொச்சி மாவட்டம் முதல் தடவையாக பங்குபற்றியிருந்தது என்பதுடன், போட்டியிட்ட முதல் தடவையிலேயே பல தேசிய விருதுகளையும் பெற்றுக்கொண்டுள்ளமை விசேட அம்சமாக உள்ளது.

குறுநாடக பிரிவில் இதே குழுவைச் சேர்ந்த சிறிகாந்தவின் நெறியாள்கையில் உருவான 'அங்கீகாரம்' நாடகம் ஆண்டின் சிறந்த தயாரிப்பாக முதலாமிடம் பெற்றதுடன், சிறந்த இயக்குநர், தயாரிப்பு, மேடையமைப்பு, பிரதி, நடிப்பு, ஒளியமைப்பு பிரிவுகளில் விருதுகளையும் வென்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தேசிய விருதுகளை மாவட்டத்திற்குப் பெற்றுக்கொடுத்த கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## இளநீர் விற்கும் இளைஞன் மின்சாரம் தாக்கியதில் பலி!

குருநாகல் பகுதியில், தென்னை மரத்தில் ஏறி, இளநீர்குலையைப் பறிக்கும்போது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஏறாவூர் - மக்காமடி, ஆதம்லெப்பை குறுக்கு வீதியை அண்டி வசிக்கும் தாவூத் சலீம் முஹம்மது றிபான் (வயது 19) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

இவர் இளநீர் வாங்கி வந்து விற்கும் தொழிலைச் செய்து வருபவர் என்றும் குறிப்பாக இளநீர் உற்பத்தியாகும் குருநாகல் போன்ற பிரதேசங்களுக்குச் சென்று, அங்கு தானே மரத்தில் ஏறி இளநீர்க் குலைகளைப் பறித்து வந்து விற்பனை செய்து வரும் இளம் குடும்பஸ்தர் என்றும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவதினத்தன்றும், இவர் குருநாகல் இப்பாகமுவ பிரதேசத்தில் உள்ள தென்னந்தோப்புக்களிலுள்ள தென்னை மரங்களில் ஏறி இளநீர்க் குலையைப் பறித்துக் கொண்டிருக்கும்போது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கியுள்ளது.

இதன்போது, உதவிக்கு விரைந்தவர்கள் மின்சாரம் தாக்கிய இளைஞனை, வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று கொண்டிருக்கும்போதே அவரது உயிர் பிரிந்து விட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

சடலம் உடற்கூறாய்வுப் பரிசோதனைகளின் பின்னர் ஏறாவூருக்கு எடுத்துவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவித்த பொலிஸார், சம்பவம் பற்றி மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## தந்தை,தாய்,குழந்தை நசியுண்டு ..................................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இடிபாடுகளில் சிக்கி ஒரு வீட்டிலிருந்த ஒன்றரை மாதப் பச்சிளம் குழந்தையும், அக்குழந்தையின் பெற்றோரும் என 3 பேர் நசியுண்டு பரிதாபகரமாகப் பலியாகியுள்ளனர்.

சாமில பிரசாத் (வயது 35), அச்சலா ஏகநாயக்க (வயது 32) மற்றும் அவர்களது ஒன்றரை மாத வயதுடைய குழந்தை ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

மீட்புப் பணியாளர்கள் காலையிலேயே குழந்தையைப் படுகாயங்களுடன் மீட்டு கண்டி போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும், குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

பிற்பகல் சாமில பிரசாத், அச்சலா ஏகநாயக்க ஆகியோரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

அச்சலா ஏகநாயக்க ஒரு சட்டத்தரணி. திறந்த பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றி வந்துள்ளார். அவரின் கணவர் சாமில பிரசாத் அதே இடத்தில் ஒரு ஹோட்டலை நடத்தி வந்துள்ளார்.

கட்டடத்தின் நுழைவாயில் பகுதியைத் தவிர, மிகுதி அனைத்துப் பகுதிகளும் இடிந்து விழுந்து விட்டன.

கட்டடம் இடிந்து விழும் அறிகுறிகள் தென்பட்டதையடுத்து, அதிகாலை 3 மணிக்கே கட்டட உரிமையாளர் தனது மனைவி, இரண்டு பிள்ளைகளுடன் கட்டடத்தைவிட்டு வெளியேறிவிட்டார். ஆனால், அவர் அயல் வீடுகளுக்கு எச்சரிக்கை விடுக்காமல் அமைதியாக வெளியேறி விட்டார். கட்டடம் இடிந்து அருகிலிருந்த இரண்டு வீடுகளின் மீது விழுந்துள்ளது. அதில் அயல்வீடொன்றில் வசித்த தம்பதியும், குழந்தையும் உயிரிழந்துள்ளனர். எனினும், அந்த வீட்டிலிருந்த தம்பதியினரின் இரு உறவினர்கள் உயிராபத்து இன்றி மீட்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அச்சலா ஏகநாயக்கரின் தாயார் ஜெயந்தி ஏகநாயக்க (வயது 60) தெரிவித்ததாவது:-

நான் ஹோட்டலில் பணிபுரியும் இளைய மகளுடன் ஒரு அறையில் தூங்கிக் கொண்டிருந்தேன். அடுத்த அறையில் மகள், கணவன், பிள்ளை தூங்கிக் கொண்டிருந்தனர். அதிகாலை ஐந்து மணியளவில் ஒரு பெரிய சத்தம் வந்தது. எதுவும் தெரியவில்லை. அறையின் சுவர்கள் உடைக்கப்பட்டு மூடப்பட்டேன். இருட்டில் எதுவும் தோன்றவில்லை. மெதுவாக தடவி படுக்கையின் அருகே தொலைபேசியைப் எடுத்தேன். அங்கிருந்தபடியே 119 ஐ அழைத்து சொன்னேன். சிறிது நேரத்தில், பொலிஸார் வந்தனர்.

ஒரு குழு எம்மை கயிறு மூலம் மீட்டனர். எமக்கு முன்பாக இருந்த மகள், மருமகன், குழந்தை இருந்த அறை முற்றாக இடிந்திருந்தது - என்றார்.

இடிந்து விழுந்த ஐந்து மாடிக் கட்டடத்தின் உரிமையாளர், அவரது குடும்பத்தினர் யாரும் காயமடையவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் கண்டி தலைமையகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு

## இலங்கைக்குப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதுபடகில் இலங்கைக்குகடத்துவதற்காக 22 மூட்டைகளில் தடை செய்யப்பட்ட கடல் அட்டைகள் மற்றும் சமையல் மஞ்சள் ஆகியவை மறைத்துவைத்திருந்தமை தெரிய வந்தது.

பின்னர் மீனவர்களிடம் மெரைன் பொலிஸார் நடத்திய கிடுக்கிப்பிடி விசாரணையில் இந்தப் படகில் தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து பாம்பன் கடல் வழியாக இலங்கைக்கு கடல் அட்டைகளும், சமையல் மஞ்சளும் கடத்தி செல்வதற்காக படகில் எடுத்து சென்ற போது நடுவழியில் இயந்திரப் பழுது காரணமாக நடுக்கடலில் அவர்கள் தத்தளித்து நின்றமை தெரிய வந்தது.

இதனை தொடர்ந்து படகில் இருந்த தூத்துக்குடி லூர்தம்மாள்புரத்தை சார்ந்த மலையாண்டி, தூத்துக்குடி திரேஸ்புரத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் மற்றும் பெலதீன் ஆகிய மூன்று மீனவர்களை கைது செய்து மெரைன் பொலிஸார் படகு அதிலிருந்த கடல் அட்டைகள், சமையல் மஞ்சள் ஆகியவற்றையும் பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். 22 மூடைகளில் சுமார் 800 கிலோ கடல் அட்டைகளும், 400 கிலோ மஞ்சளும் இருந்தன என மெரைன் பொலிஸ் ஆய்வாளர் கனகராஜ் தெரிவித்தனர்.

மேலும் கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகள் மற்றும் சமையல் மஞ்சளின் சர்வதேச மதிப்பு சுமார் 20 லட்சம் இந்திய ரூபாவாக இருக்கலாம் என பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## 20 இல் சுகவுக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

20ஆவது திருத்தம் குறித்து ஆராய்வதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குழுவொன்றை நியமித்து சுயாதீனமாக ஆராயும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் குழு நியமிக்கப்படாமை குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவ்வாரத்தில் 20 தொடர்பில் ஆராயும் குழு நியமிக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். அந்தக் குழுவினால் முன்வைக்கப்படுகின்ற பரிந்துரைகளுக்கு அமைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதன் நிலைப்பாட்டை அறிவிக்கும். அதனால் தற்போது விரிவாக எந்தக் கருத்தையும் எம்மால் கூற முடியாது - என்றார்.

## விடுதலைப் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவிடயங்களில் ஒற்றுமையாக செயற்பட வேண்டியதும் அவசியமாகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## மழையுடன் மண்சரிவு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளிமண்டலவியல் திணைக்களம் இன்று காலை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில பகுதிகளிலும் மழை மற்றும் காற்றுடன் கூடிய வானிலை நிலவக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

குறித்த மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவுக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தினையும் புத்தளம் மாவட்டத்தினையும் சேர்ந்த பட்டதாரி அணி ஒன்று பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கின்றது.

இவர்களின் பயிற்சி நடவடிக்கையில் ஒன்றாக கரையோர சுற்றுச்சூழல் தினத்தினை முன்னிட்டு நேற்று முல்லைத்தீவு கரையோரப்பகுதிகள் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

59 ஆவது படைப்பிரிவின் படையினரும் இணைந்து முல்லைத்தீவு கடற்கரையின் சுமார் 4 கிலோமீற்றர் தூரம் சுத்தம்செய்யப்பட்டுள்ளது.

## குணமடைந்து வீடு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் பரிசோதனைகளில் கொரோனாத் தொற்றிலிருந்து பூரணமாகக் குணமடைந்தமை உறுதி செய்யப்பட்டு கடந்த 08 ஆம் திகதி வைத்தியசாலையில் இருந்து வீடு செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

வீடு திரும்பிய போதிலும் அவரை 14 நாட்கள் வீட்டில் சுயதனிமைப்படுத்தலில் வைத்திருந்தபோதே கொரோனாத் தொற்று மீண்டும் ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## கொரோனா 3,283 ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3 ஆயிரத்து 283 பேர் வரையிலானோரே கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவர்களில் 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் வெளிநாடுகளில் இருந்து வந்திருந்தபோது அடையாளம் காணப்பட்டவர்களாவர்.

இவ்வாறாக தொற்றுக்குள்ளானவர்களில் 13 பேர் இதுவரையில் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 3 ஆயிரத்து 70 பேர் பூரண குணமடைந்துள்ளனர்.

இதன்படி இந்த வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் 200 பேர் வரையிலானோரே தற்போது வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று நேற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

## 13 ஆவது திருத்தத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டு மாகாண சபைகளும் சிறந்த முறையில் செயற்படுத்தப்படும் - என்றார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு விரைவில் முடிவு கட்டுவோம் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பல தடவைகள் பகிரங்கமாகத் தெரிவித்து வந்த நிலையில், தற்போது அந்தத் திருத்தச் சட்டம் ஒருபோதும் இரத்துச் செய்யப்படமாட்டாது என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir — மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தலைவர்களின் தவறுகள்

மக்கள், மாக்களாக அல்லாமல் மக்களாக வாழ்வதற்கு வழி காட்டுபவை மதங்கள்.

மதங்கள் கட்டும் நெறியை மதம் பிடிக்காமல் பின்பற்றினாலேயே சமூகம் சுமுகமாக இயங்கும்.

ஆனால் சமயங்களின் பெயரால் நாடுகளினதும் சமூகங்களினதும் தலைவர்கள் நடத்தும் பித்தலாட்டங்களே பல சமயங்களில் பெரும் களேபரங்கள், குழப்பங்கள், கலவரங்கள் யுத்தங்களுக்குக் காரணமாகி விடுகின்றன.

விக்கிர வணக்கத்தை – சிலை வழிபாட்டை – ஏற்காமல் தான் இந்துவான சித்தார்த்த கௌதமர் தமக்கென பௌத்த மார்க்கத்தை ஸ்தாபித்து கௌதம புத்தராக மெய்ஞானம் பெற்றார். ஆனால் கடைசியில் என்னாயிற்று? அவரையே பெரிய பெரிய சிலைகளாக நிர்மாணித்து வணங்கும் நிலைமை வந்து விட்டது.

மெய்ஞான தர்மத்தைப் போதித்தவர் புத்தர். ஆனால் இலங்கையில் என்ன நடக்கன்றது?

*“ஜே.ஆர். ஜெயவர்த்தனா உண்மையான பௌத்தராக ஒழுகியிருப்பாராயின் நான் ஆயுதம் ஏந்த வேண்டி நேர்ந்திராது”* என்றார் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.

மதத்தை மதவெறி பிடிக்காது பின்பற்றியிருந்தால் இலங்கைத் தீவில் இரத்த ஆறு ஓடியிருக்காது. இன்றிருக்கும் இனக் குரோதமும், மத மாச்சரியமும் இப்படிப் பூதாகர வடிவெடுத்திருக்காது.

இன்று, அகிம்சை வழியில் போராடிய ஒரு காந்தீயவாதியைக் கூட நினைவேந்தல் செய்ய முடியாத அளவுக்கு இன வெறி பீறிட்டிருக்காது.

காந்தி தேசத்துக்கு காந்தீயம் போதித்தவன் தியாக தீபம் திலீபன்.

காந்தி தேசத்தின் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி, காந்தீயத் தத்துவங்களை – வழிகாட்டலை – மதித்திருப்பாராகில் திலீபன் உயிர்துறக்க நேர்ந்திருக்காது.

இந்தியப் படைகள் – புலிகள் யுத்தம் வெடித்திருக்காது. தமிழர் தாயகமும், சிங்களவர் தேசமும் இந்தக் சீத்துவத்தில் இருந்திருக்கா. புரிந்துணர்வும், இன சௌஜன்யமும் பெருக்கெடுத்திருக்கும்.

தமிழர் தேசம் மீது இரும்புப் பிடி இராணுவ ஆட்சியை ஏவி விட்டிருக்கும் கடும் போக்குவாதியான கோட்டாபய ராஜபக்ஷ தாம் ஜனாதிபதியானதும் எங்கே சென்று பதவியேற்றார்?

நாற்பது வருடகாலம் அனுராதபுரதில் இருந்து இலங்கையை ஆண்ட தமிழ் மன்னான எல்லாளனைப் போரில் வென்று இலங்கை முழுவதற்கும் அரசனானவன் துட்டகைமுனு. அவனால் ஸ்தாபிக்கப்பட்ட மிகப் பெரிய தாதுகோபுரமான ரூவான் வெலிசாயவில்தான் கோட்டாபய பதவியேற்றார்.

அதை 2 ஆயிரத்து 150 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணித்த துட்டகைமுனு மன்னன் என்ன அறத்தைப் போதித்தான்?

தன்னுடன் போரிட்டு உயிரிழந்த எல்லாள மன்னனின் உடலைத் தக்க மரியாதையுடன் துட்டகைமுனு தகனம் செய்தான். அந்த இடத்தில் கோயில் ஒன்றைக் கட்டவும் ஏற்பாடு செய்தான். அந்த வழியே செல்பவர்கள் யாராக இருந்தாலும் – அவர்கள் அரசர்களேயானாலும் – அந்தக் கோவிலைக் கும்பிட்டு விட்டே செல்ல வேண்டும் என உத்தரவிட்டான்.

இதுதான் மதங்களும், முன்னோர்களும் காட்டிய வழி. ஆனாலும் இன்றைய தலைவர்கள் என்ன செய்கின்றார்கள்...?

பஞ்சசீலம் போதித்த கௌதம புத்தரை நாட்டின் தலைவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தன சரிவரப் பின்பற்றியிருப்பாராயின் இந்த நாட்டில் பிரிவினைக்கான யுத்தம் வெடித்திராது.

காந்தி தேசத்தின் தலைவராக இருந்த ராஜீவ் காந்தி, அகிம்சா மூர்த்தி காந்தி மகானின் காந்தீயத் தத்துவத்தின் பெருமையைப் புரிந்திருப்பாராயின் இந்தியப் படைகள் – புலிகள் தேமாதல் வெடித்திருக்காது.

துட்டகைமுனு போதித்த – எதிரியை மரியாதை செய்யும் – உயர்ந்த பண்பியல்பு ராஜபக்ஷக்களுக்கு இருந்திருந்தால் பல்லாயிரம் போராளிகளின் வித்துடல்கள் புதைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்கள் புல்டோஸர்கள் கொண்டு அழிக்கப்பட்டிருக்கமாட்டா. சிங்களத்தின் இப்பெரும் கொடூரம் தமிழர் தேசத்தின் ஆன்மாவில் என்றும் வெஞ்சினம் கிளப்பும் நிரந்தர காயமாகப் பதிந்திருக்காது.

துட்டகைமுனுவின் ருவன் வெலிசாயவில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, எதிரியையும் மதிக்கும் துட்டகைமுனுவின் உயரிய பண்பு புரிந்திருந்தால், திலீபன் நினைவேந்தலுக்குத் தடை வந்திருக்காது.

என்ன வெய்வது, பெரியோர்களின் வழிகாட்டுதல்கள் அதிகாரத்தில் இருப்போருக்கு பெரும்பாலும் அச்சமயத்தில் புரிவதில்லை.

அதுவே, நசுக்கப்படும் நாடுகளின் – சமூகங்களின் – இனங்களின் – தலையெழுத்து. தலைவிதியும் கூட.

# 20 ஆவது திருத்தம் ஆராய்ந்தே முடிவு!

## திகாம்பரம் நம்பிக்கை



அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பாக விரைவில் கூடி ஆராய்ந்து முடிவு அறிவிக்கப்படும் என தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

20ஆவது திருத்தச்சட்ட மூலம் தொடர்பாக கேள்வியெழுப்பப்பட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பாக சமூகத்தில் பலகோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. மேற்படி சட்டமூலத்திலுள்ள உள்ளடக்கங்கள் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம். எமது மலையக புத்திஜீவிகளுக்கும் கருத்துகளை முன்வைப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

20 ஆவது திருத்தச் சட்டமூலத்திலுள்ள சில சரத்துக்கள் தொடர்பாக அரசாங்கத்துக்குள்ளேயே ஒருமித்த நிலைப்பாடு இல்லை. ஏற்கனவே வெளியிடப்பட்ட வர்த்தமானி திருத்தப்பட்டு புதிய வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்படும் என்றார்கள்.

ஆனால், நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின்போதே திருத்தப்படும் என தற்போது அறிவித்துள்ளனர். எனவே, எவ்வாறான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பது எமக்குத் தெரியாது.

நாடாளுமன்றத்தில் சட்டமூலம் முன்வைக்கப்பட்ட பின்னர் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உயர்பீடம் கூடி ஆராய்ந்து 20 தொடர்பான நிலைப்பாட்டை அறிவிக்கும். ஜனநாயகத்துக்கும், நாட்டுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்பதே பொதுவான கருத்தாகும். அதனையே நாமும் விரும்புகின்றோம். – என்று தெரிவித்தார்.

# 20 ஆவது திருத்தம் பஸிலுக்கானதல்ல!

## அமைச்சரவையில் ஜனாதிபதி



முன்மொழியப்பட்டுள்ள அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் பசில் ராஜபக்ஷவிற்கானது அல்ல என்றும் அது தனது முடிவு என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது அதிருப்தியை வெளிப்படுத்தும் விதத்தில் 19 ஆவது திருத்தத்தை தொடர்ந்தும் வைத்திருக்க விரும்பினால் அதனை வைத்திருக்கலாம் எனவும் ஜனாதிபதி திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த விடயம் தொடர்பாக தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலின்போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியில் அரசமைப்பு மாற்றங்களை கொண்டுவருவதாக உறுதியளித்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, மாற்றங்களை மேற்கொள்ளாமல் நாட்டை நிர்வகிப்பது கடினமான விடயம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

19 ஆவது திருத்தம் சில அரச சார்பற்ற அமைப்புகளின் முயற்சிகளால் கொண்டு வரப்பட்டது எனவும் அதில் உள்ள சிறந்த விடயங்களை புதிய திருத்தத்தில் இணைத்துக் கொண்டுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்பின் நகல் வடிவம் தயாரானதும் மாற்றங்களை கோருவதற்கும் புதிய விடயங்களைச் சேர்ப்பதற்கும் அனைவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# இராணுவம் அச்சுறுத்தல் வவுனியா மக்கள் கவலை!

வவுனியா,செப்.20

வவுனியா – வடக்கின் தனிக்கல்லு பிரதேசத்தில் அமைந்துள்ள வயல் நிலங்களிற்கு செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுப்பதாக பிரதேச ஒருங்கிணைப்பு குழுவில் குற்றம் சாட்டப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேசத்தின் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் கு.திலீபன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அப்பகுதி பொதுமக்கள் –

தனிக்கல்லு பகுதியில் அமைந்துள்ள எருக்கலம் பிலவு என்ற 500 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல்நிலங்கள் நூறு வருடங்கள் பழைமையானவை.


இன்று எமது பரம்பரை, விவசாய காணிகளிற்கு செல்வதற்கு இராணுவம் அனுமதி மறுக்கிறது. காணியின் உறுதியை தந்த பின்னர் காணிக்குள் இறங்குமாறு இராணுவத்தால் அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது.

இதனால் இராணுவத்தின் கடுமையான நெருக்குவாரத்திற்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். தனிக்கல்லு பகுதி மாத்திரம் இல்லாமல் எல்லைப்பகுதிகளில் உள்ள அனைத்து காணிகளிலும் இதே பிரச்சினை காணப்படுகின்றது.

எமது வயல்நிலத்தில் உள்ள சிறிய பற்றையைத் துப்புரவாக்குவதற்கு சென்றாலும் காணியின் உறுதிப் பிரதியை எடுத்து இராணுவத்திடம் கொடுத்தபின்னரே நாம் உள்ளே இறங்க அனுமதிக்கப்படுகின்றோம். எனவே இந்த நிலைமை மாற்றப்படவேண்டும்.

இவ்விடயம் தொடர்பாக நாளை 21ஆம் திகதி இடம்பெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவிற்கு, சமுகம் தந்து இவ்விடயங்களை தெரிவிக்குமாறு ஒருங்கிணைப்புக் குழு தவிசாளரால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவை அதிரவைக்கும் கொரோனா மொத்தப் பாதிப்பு 54 லட்சத்தைக் கடந்தது!



இந்தியா முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 54 லட்சத்தைக் கடந்துள்ளது.

கடந்த சில நாள்களாக நாடு முழுவதும் பதிவாகும் ஒரு நாள் கொரோனா பாதிப்பு எண்ணிக்கையானது சடுதியாக அதிகரித்துச் செல்கிறது.

இந்த நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் நாடு முழுவதும் 92 ஆயிரத்து 755 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோல 1,149 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 54 லட்சத்து 619 ஆக அதிகரித்துள்ளது.

இதேநேரம் இந்த தொற்று காரணமாக இதுவரையில் 86 ஆயிரத்து 774 பேர் உயிரிழந்துள்ளனர். தற்போது 10 லட்சத்து 10 ஆயிரத்து 802 பேர் சிகிச்சை பெற்று வருகின்றமையோடு, அவர்களில் 8 ஆயிரத்து 944 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதேநேரம், இந்த வைரஸ் தொற்றில் இருந்து இதுவரை 43 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பூரண குணமடைந்துள்ளனர் என மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

அதேநேரம் இதுவரை 6.36 கோடி மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன. கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 12 லட்சம் பேரின் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன என ஐசிஎம்ஆர் மருத்துவமனை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா நோய்த் தொற்றுப் பாதிப்பு முதல்வர்களுடன் மோடி ஆலோசனை

கொரோனா தொற்று பாதிப்பு அதிகம் காணப்படும் 7 மாநில முதல்வர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை நடத்தவுள்ளார்.

நாட்டில் கொரோனா தொற்று பாதிப்பு தொடர்பாக மாநில முதல்வர்களுடன் பிரதமர் மோடி அவ்வப்போது ஆலோசனை நடத்தி வருகிறார்.

டெல்லி, மகாராஷ்டிரா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் தற்போது தொற்று பாதிப்பு அதிக அளவில் காணப்படுகிறது.

நாட்டில் தொற்று பரவல் இன்னும் கட்டுக்குள் வராத சூழலில், தொற்று பாதிப்பு அதிகம் காணப்படும் 7 மாநில முதல்வர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 23 ஆம் திகதி ஆலோசனை நடத்தவுள்ளார்.



முன்னதாக கடந்த மாதம் பிரதமர் மோடி, சிலமாநிலமுதலமைச்சர்களுடன்ஆலோசனை நடத்தினார். இதன்போது நாட்டில் உள்ள 10 மாநிலங்களில் தொற்று பரவலை கட்டுப்படுத்தினால், கொரோனா பெருந்தொற்றுக்கு எதிரான போரில் இந்தியா வெல்லும் என பிரதமர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்தியாவில் கொரோனாத் தடுப்பூசி சோதனை!

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்தியாவில் நடைபெறும் கொரோனா தடுப்பூசியின் மூன்றாம் கட்ட பரிசோதனை நாளை (திங்கட்கிழமை) முதல் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக தெரிவு செய்யப்பட்ட சுமார் 200 தன்னார்வலர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தி பரிசோதிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

மனிதர்களுக்குப் பரிசோதிக்கும் இந்த மூன்றாம் கட்ட நடவடிக்கையை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துடன் இணைந்து புனேயில் உள்ள சீரம் இன்ஸ்டிட்யூட் ஒவ் இந்தியா என்ற நிறுவனம் மேற்கொண்டுள்ளது.



புனேயின் சாசோன் பொது மருத்துவமனையில் இப்பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

இங்கிலாந்தில் ஒருவருக்கு உடல் நலபாதிப்பு ஏற்பட்டதையடுத்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் முன்னெடுத்த கொரோனா தடுப்பூசி பரிசோதனைகள் சில நாள்கள் நிறுத்தி வைக்கப்பட்டன.

எனினும் மீண்டும் பரிசோதனையை நடத்த செப்ரெம்பர் 15ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நாடு முழுவதும் மும்மொழிக் கொள்கை தி.மு.கவின் கேள்விக்கு மத்தி திட்டவட்டம்

புதிய கல்விக் கொள்கையின்படி மும்மொழிக் கொள்கையே பின்பற்றப்படும் என மக்களவையில் மத்திய கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மக்களவையில் புதிய கல்விக்கொள்கை தொடர்பாக தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பியிருந்தார்.

தமிழகத்தில் இரு மொழிக் கொள்கையே தொடரும் என தமிழக அரசு அறிவித்தமை தொடர்பாக அவர் எழுப்பிய கேள்விக்கு, மத்திய கல்வி அமைச்சகம் எழுத்துபூர்வமாக பதில் அளித்துள்ளது.

அதில், புதிய கல்விக் கொள்கையின்படி மும்மொழிக் கொள்கையே பின்பற்றப்படும் என்றும் மூன்றாவது மொழியாக எதைக் கற்க வேண்டும் என்பது மாநிலங்கள் மற்றும் மாணவர்களின் முடிவு என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், மூன்றாவது மொழி என்னவென்பது மாநில அரசுகளின் விருப்பம் என்றும் எந்த மொழியும் திணிக்கப்படாது எனவும் கல்வி அமைச்சு கூறியுள்ளது.

# லஷ்கர்–இ – தொய்பா பயங்கரவாதிகள் மூவர் காஷ்மீரில் கைதாகினார்கள்

ஜம்மு – காஷ்மீரில் 3 லஷ்கர் – இ – தொய்பா அமைப்பு பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு அவர்களுக்கு பாகிஸ்தானில் இருந்து டிரோன்களில் அனுப்பப்பட்ட ஏராளமான ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

ரஜவுரிமாவட்டத்துக்கு டிரோன்களில் பாகிஸ்தானில் இருந்து ஆயுதங்கள் அனுப்பப்பட்டு இருப்பதாகவும், அவற்றை பெறுவதற்கு பயங்கரவாதிகள் வருகின்றனர் எனவும் ரகசியத் தகவல் கிடைத்தது. இதன்பேரில் அங்கு சென்று சோதனை நடத்தி புல்வாமாவை சேர்ந்த பயங்கரவாதிகள் 3 பேரை கைது செய்தனர்.

இதன்போது இரண்டு ஏ.கே. 56 ரக ரைபிள்கள், ஏராளமான தோட்டாக்கள், 2 சீன கைத்துப்பாக்கிகள், 4 கிரானைடுகள், ஒரு லட்சம் ரூபா ரொக்க பணத்தை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர்.



# வேளாண் சட்டவரைவுகள் வாக்கெடுப்பில் நிறைவேற்றம்!



எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வேளாண் சட்ட வரைவுகள் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டன.

மேலும், வரைவுகள் மீது எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த திருத்தங்கள் ஏற்கப்படவில்லை என்பதுடன் வேளாண் வரைவுகள் மீது தி.மு.க. உறுப்பினர் திருச்சி சிவா கொண்டு வந்த திருத்தங்களும் தோற்கடிக்கப்பட்டன.

இந்நிலையில், இந்த சட்ட வரைவுகள் நிறைவேற்றப்பட்டதையடுத்து அவை நாளை காலை ஒன்பது மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

# பாதுகாப்புத் துறையின் தகவல்களை சீனாவுக்கு வழங்கிய பத்திரிகையாளர்

## சீனர் உட்பட மூவர் கைதாகினர்

இந்திய பாதுகாப்புத்துறை தொடர்பான இரகசியத்தகவல்களைசீனஉளவுத்துறைக்கு அனுப்பிய பத்திரிகையாளர் உட்பட மூவரை டெல்லி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

டெல்லியைச் சேர்ந்த ஃப்ரீலான்சிங் பத்திரிகையாளர் ராஜீவ் சர்மா, டெல்லியில் வசித்துவந்த சீனப் பெண் மற்றும் நேபாளப் பிரஜை ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டினரிடமிருந்து, கைதான பத்திரிகையாளர் ராஜீவ் சர்மா மிகப்பெரிய அளவில்பணம்பெற்றுக்கொண்டுஇந்தியபாதுகாப்புத்துறை தொடர்பான பல்வேறு தகவல்களை வழங்கியுள்ளார்.

இந்த உளவு வேலையில் ஈடுபட்டமை தொடர்பான விசாரணைக்காக கடந்த 14ஆம் திகதி முதலே ராஜீவ் சர்மா டெல்லி பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருந்தார்.

இந்நிலையில், அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், குறித்த வெளிநாட்டினர் இருவரும் இந்திய பாதுகாப்புத் தொடர்பான இரகசியத் தகவல்களை சீன உளவு அமைப்புக்கு அனுப்பியமையை ராஜீவ் சர்மா ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து, அவர் இன்று முறைப்படி கைது செய்யப்பட்டார் எனவும், அவரிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் டெல்லி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எல்லை விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் மோதல் அதிகரித்து வருகின்றது.



இதற்கிடையில், இந்திய பிரதமர், ஜனாதிபதி, இராணுவத் தளபதி, எதிர்க்கட்சித் தலைவர்கள் உட்பட 10 ஆயிரம் இந்திய பிரமுகர்களை சீனாவைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனம் உளவு பார்ப்பது கடந்த சில நாள்களுக்கு முன்னர் தெரியவந்தது. இதையடுத்து, இவ்விவகாரம் தொடர்பாகத் தேசிய சைபர் பாதுகாப்புக் குழு விசாரணை நடத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெலாரஸில் போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான பெண்கள் கைது!

ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகா ஷென்கோ பதவி விலக வேண்டும் என்று கோரி போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான பெண்களை தலைநகர் மின்ஸ்கில் பெலரஸ் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெலரஸை 26 ஆண்டுகளாக ஆட்சி செய்த ஜனாதிபதி லுகா ஷான்கோ, ஒகஸ்ட் 9 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றார். ஆனால் இதன் விளைவாக இடம்பெற்ற ஆரம்ப ஆர்ப்பாட்டங்கள் மீது மிருகத்தனமான ஒடுக்கு முறை மக்கள் கோபத்தைத் தூண்டியது.

இந்நிலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆறாவது வாரமாக போராட்டம் நடைபெறவிருந்தது.

நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மொத்தமாக 300 இற்கும் மேற்பட்ட பெண்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என உள்ளூர் மனித உரிமைகள் குழுக்கள் தெரிவிக்கின்ற போதும் பொலிஸார் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்காவின் ஒருதலைப்பட்ச நடவடிக்கையை மீறுமாறு உலக நாடுகளிடம் ஈரான் கோரிக்கை

சர்வதேச பொருளாதாரத் தடைகளை மறுசீரமைப்பதற்கான அமெரிக்காவின் ஒருதலைப்பட்ச நடவடிக்கையை மீறுமாறு ஈரான் உலக நாடுகளை வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஈரானிய வெளியுறவு அமைச்சர் முகமது ஜவாத் ஸரீஃப், காலக்கெடுவுக்கு முன்னர் அமெரிக்காவின் கொடுமைகளுக்கு கண்டனத்தையும் தெரிவித்தார்.

அமெரிக்கர்களின் கொடுமைப்படுத்துதலுக்கு எதிராக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை உலக சமூகம் தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் உலக நாடுகளிடம் கேட்டுக் கொண்டார்.

ஈரானுக்கு எதிரான சர்வதேச தடைகள் மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ளன என அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ அச்சுறுத்தி இருந்தார்.



மேலும் ஐ.நா. உறுப்பு நாடுகள் இந்த பொருளாதாரத் தடைகளைச் செயற்படுத்துவதற்கான கடமைகளை நிறைவேற்றத் தவறினால், அதன் பலன்களை ஈரான் அறுவடை செய்யாமல் இருப்பதை உறுதி செய்வதற்கும் அதிகாரிகளைப் பயன்படுத்த அமெரிக்கா தயாராக உள்ளது என்றும் கூறினார்.

# வெள்ளை மாளிகைக்கு விஷம் தடவிய கடிதம்!

## அனுப்பப்பட்டதால் பரபரப்பு

அமெரிக்க வெள்ளை மாளிகைக்கு விஷம் தடவிய கடிதம் அனுப்பப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு, ரைசின் என்ற விஷப்பொருள் தடவப்பட்ட கடிதம் அனுப்பப்பட்டதாக உளவுத் துறைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அந்தக் கடிதம், வெள்ளை மாளிகைக்கு சென்றடைவதற்கு முன்பாகவே, உளவுத் துறை அதிகாரிகளால் இடைமறிக்கப்பட்டுள்ளது.



கனடாவில் இருந்து இந்தக் கடிதம் அனுப்பப்பட்டதாக உளவுத்துறையின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில், ட்ரம்பை குறிவைத்து கடிதம் அனுப்பப்பட்டதா? என்ற கோணத்தில் உளவுத்துறை விசாரணையை முன்னெடுத்துள்ளது.

இதேபோன்று கடந்த 2014 ஆம் ஆண்டு, அப்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கு நஞ்சுப்பொருள் அடங்கிய கடிதம் அனுப்பப்பட்டது. இதனுடன் சம்பந்தப்பட்ட சந்தேகநபருக்கு 25 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தாய்லாந்தில் அதிகரிக்கும் எதிர்ப்புப் போராட்டங்கள்

முன்னாள் இராணுவ ஆட்சிக்குழுத் தலைவரான பிரதமர் பிரயுத் சான் - ஓச்சாவின் அரசாங்கத்திற்கு எதிராக தாய்லாந்தில் எதிர்ப்புக்கள் அதிகரித்து வருகின்றன.

சில எதிர்ப்பு போராட்டக்காரர்கள் மன்னர் மகா வஜிரலோங்கொர்னின் முடியாட்சி அரசியலை சீர்திருத்த வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளனர்.

2019 மார்ச் இல் இடம்பெற்ற தேர்தலுக்குப் பின்னர் பிரயுத் பிரதமராக நியமிக்கப்பட்டமையை அடுத்து அரசமைப்பு நீதிமன்றம் தேர்தல் சட்டத்தை மீறியதாகக் கூறி, எதிர்க்கட்சித் தலைவரான தனதோர்ன் ஜுவாங்ரூங்ருவாங்கிட்டை நாடாளுமன்ற உறுப்பினராக தகுதி நீக்கம் செய்தது.

தனதோர்னின் தகுதிநீக்கம் மற்றும் அவரது எதிர்கால முன்னோக்கி கட்சியை தடை செய்வதற்கான நடவடிக்கைகளை எதிர்த்து பல ஆயிரம் எதிர்ப்பு போராட்டக்காரர்கள் பாங்கொக்கில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதனை அடுத்து பெப்ரவரி 21 அரசமைப்பு நீதிமன்றம் விதித்த தடையை அடுத்து மறுதினம் நூற்றுக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தொடர்ந்து மார்ச் 26 இல் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கக், கூட்டங்கள் மற்றும் பயணங்களைக் கட்டுப்படுத்த தாய்லாந்து அதிகாரிகள் அவசரகால நிலையை அறிவித்தனர்.

இருப்பினும் ஜூலை 18 இல் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து அதாவது நாடாளுமன்றத்தை கலைத்தல், அரசமைப்பை திருத்துதல் மற்றும் விமர்சகர்களைத் துன்புறுத்துவதை நிறுத்துதல் உட்பட கோரிக்கைகளுடன் பாங்கொக்கில் போராட சுமார் 2 ஆயிரத்து 500 பேருக்கு இளைஞர் குழு அழைப்பு விடுத்தது.

இதனை அடுத்து பாங்கொக்கின் ஜனநாயக நினைவுச்சின்னத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஓகஸ்ட் 16 இல் இடம்பெற்ற போராட்டத்தில் பங்கேற்றனர்.

இந்த போராட்டம் மேலும் வலுப்பெற 2014 ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின்னர் நடந்த மிகப்பெரிய ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.



செப்ரெம்பர் 19 இல் முடியாட்சியில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும் என்றும் பிரயுத்தை அகற்ற வேண்டும் என்றும் கோம் எழுப்பி தொடர்ந்தும் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யாவில் புதிதாக 6 ஆயிரம் பேர் கொரோனா தொற்றுக்கு இலக்காகினர்

ரஷ்யாவில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) புதிதாக 6 ஆயிரத்து 148 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாளாந்தம் அடையாளம் காணப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை 6 ஆயிரத்தைத் தாண்டிய இரண்டாவது நாள் இது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து ரஷ்யாவில் அடையாளம் காணப்பட்ட மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 11 லட்சத்து 3 ஆயிரத்து 399 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 79 பேர் இந்த நோயால் இறந்துவிட்டனர் என நாட்டின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது, இதனால் நாட்டின் இறப்பு எண்ணிக்கை 19 ஆயிரத்து 418 ஆக அதிகரித்துள்ளது.

# கலிபோர்னியாவில் மழை காட்டுத் தீ அணைப்பு!



அமெரிக்காவின் கலிபோர்னியாவில் பெய்து வரும் லேசான மழை காரணமாக காட்டுத் தீயை அணைப்பதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

கலிபோர்னியாவில் பற்றிய காட்டுத் தீ ஒரேகான், வொஷிங்டன் வரை தீ பரவியுள்ளதுடன் இதன் பாதிப்பு கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா வரை ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து பற்றி எரியும் பெருந்தீயைக் கட்டுப்படுத்த 19 ஆயிரம் தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர். அவர்களுக்கு உதவியாக ஹெலிக்கொப்டர்களும் நெருப்பை அணைத்து வருகின்றன.

இந்த நிலையில் 27 இடங்களில் ஏற்பட்ட தீயில் 22 இடங்களை அணைத்து விட்டனர் என தீயணைப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

அவ்வப்போது கால நிலையும், மழையும் பெய்வதால் இது சாத்தியமானதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# ரஷ்யாவின் எதிர்ப்பையும் மீறி உக்ரைனில் பிரி. போர்ப் பயிற்சி!

ரஷ்யாவின் கடும் எதிர்ப்பையும் மீறி உக்ரைனில் இங்கிலாந்து விமானப்படையினர் போர் பயிற்சியில் ஈடுபட்டனர்.

கடந்த 2014ஆம் ஆண்டு கிரீமியா, ரஷ்யாவுடன் இணைக்கப்பட்ட பின்னர் உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே பகைமை நீடித்து வருகிறது.

இந்நிலையில் உக்ரைனுடன் போர் பயிற்சி நடத்துவதாக இங்கிலாந்து அறிவித்ததற்கு ரஷ்யா கடும் எதிர்ப்புத் தெரிவித்தது.

எனினும் அதையும் மீறி இங்கிலாந்து விமானப்படையைச் சேர்ந்த 250 பரசூட் வீரர்கள் வானிலிருந்து குதித்து உக்ரைனில் பயிற்சியில் ஈடுபட்டனர்.



சி 130 ஹெர்குலஸ் விமானத்தில் பறந்து சென்ற அவர்கள் சுமார் 600 அடி உயரத்தில் இருந்து குதித்துப் பயிற்சி மேற்கொண்டனர்.

# பிரபாகரனால் செய்யமுடியாதவற்றை புலம்பெயர் தமிழர்கள் செய்வார்கள்

## இரட்டைக் குடியுரிமையால் அவர்களும் நாடாளுமன்றத்துக்கு வரப்போகிறார்கள்

## அரசை எச்சரிக்கின்றார் ஞானசார தேரர்



கொழும்பு, செப். 20

விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதக் கொள்கையானது உலகம் முழுவதும் வியாபித்துள்ளது என பொது பல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், புலம்பெயர் அமைப்பினரும் அதிகளவில் இரட்டைக் குடியுரிமை கோரி விண்ணப்பித்துள்ளனர் என்றும் பிரபாகரனால் செய்ய முடியாததை நாடாளுமன்றத்தில் தமது பலத்தை உருவாக்குவதன் மூலம் அவர்களால் செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றத்திற்குச் சென்றிருந்த ஞானசார தேரர், ஊடகங்களுகக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாட்டில் பிரதான இரு கட்சிகளும் ஆட்சியமைக்கும்போது தங்களுக்குத் தேவையான விதத்தில் அரசமைப்பை திருத்தம் செய்கிறார்கள் எனத் தெரிவித்துள்ள அவர், இதனால் அரசாங்கத்துக்கு நன்மை ஏற்பட்டதே தவிர நாட்டுக்கு எவ்வித அபிவிருத்திகளோ மாற்றங்களோ ஏற்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், அரசமைப்பின் 17 ஆவது திருத்துக்கு ஆதரவு வழங்கிய அரசியல்வாதிகள் 18 ஆவது திருத்தத்துக்கும், 19 ஆவது திருத்திற்கும் ஆதரவு வழங்கினார்கள் எனவும் அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் கடந்த காலங்களில் அரச மற்றும் சமூக மட்டத்தில் பிரதான பேசுபொருளாகக் காணப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

எனினும், 19ஆவது திருத்தத்தை ஆதிரித்த அரசியல்வாதிகள் அரசியல் தேவைகளுக்காக அதனை எதிர்க்கவும் ஆரம்பித்தார்கள் எனக் குறிப்பிட்ட அவர், அது அரசியல்வாதிகளுக்கே உரித்தான தனித்துவ இயல்பு என்றார்.

இதேவேளை, அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை இரத்துச்செய்து புதிய அரசமைப்பை உருவாக்குவதாக ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கிய நிலையில் தற்போது 20 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆனால், இந்தத் திருத்தத்தில் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிட முடியும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் நாட்டில் இல்லாதொழிக்கப்பட்டாலும் அவர்களின் பிரிவினைவாதக் கொள்கையானது உலகம் முழுவதும் வியாபித்துள்ளது எனத் தெரிவித்துள்ள அவர், இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் அரசியலில் பங்குபற்ற முடியும் என்பதை புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் நிச்சயம் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், சீனர்கள், இந்தியர்களும் எதிர்காலத்தில் இலங்கை நாடாளுமன்றில் உறுப்பினராக செயற்படுவார்கள் என்பதில் எவ்வித ஆச்சரியமும் கிடையாது என்ற நிலையில் அரசாங்கம் இரட்டைக் குடியுரிமை விவகாரத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கொரோனா வைரஸ்நோய் தொற்று மக்களுக்கு மீண்டும் எச்சரிக்கை!

## தொற்று நோய்த் தடுப்பு பிரிவு விடுத்தது

கொழும்பு, செப். 20

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் மக்கள் தொடர்ந்து அவதானத்துடன் இருக்க வேண்டுமென தொற்று நோய் தடுப்பு பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே தொற்று நோய் தடுப்பு பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், மக்கள் அனைவரும் முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதார வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 283 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 200 பேர் தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என தேசிய தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 10 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று வீடுகளுக்கு சென்றுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இதுவரையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 70 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி இதுவரையில் 13 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிராமமட்ட மரக்கறி உற்பத்தி சந்தைப்படுத்த ஏற்பாடுகள்!

## இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தகவல்

கொழும்பு, செப். 20

கிராம மட்டங்களிலான கைத்தொழில் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாக பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருள்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்துள்ளார்.

திருகோணமலைக்கு நேற்று (சனிக்கிழமை) விஜயம் செய்த அவர், தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பத்தினிபுரம் கிராமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டார்.

அத்துடன், பனையோலை சார்ந்த கிராமமாக பிரகடனப்படுத்தப்பட்ட பத்தினிபுரம் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பனைசார் உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட கட்டடத்தை பார்வையிட்டமையுடன் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்களையும் வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வின் இறுதியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், கைத்தொழில் சார் மூலப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான போக்குவரத்துப் பிரச்சினைகளை விரைவில் நிவர்த்திசெய்து தருவதாக உறுதியளித்தார்.

மேலும், கிராம மட்டங்களில் முன்னெடுக்கப்படும் கைத்தொழிற்துறை உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை தமது அமைச்சு மேற்கொள்வதாகவும் இதன் மூலமாக கிராம மட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# விபத்தில் காயமடைந்த இராணுவ வீரர் உயிரிழப்பு!

கெப்பிற்றிகொல்லாவா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த இராணுவ வீரர், சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. நேற்று (சனிக்கிழமை), கெப்பிற்றிகொல்லாவை பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இராணுவ வீரரை, இலகு ரக வாகனம் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கெப்பிற்றிகொல்லாவ பகுதியை சேர்ந்த அமரசேன (வயது28) என்ற இராணுவ வீரரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெப்பிற்றிகொல்லாவா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பௌத்த ஆலோசனை சபை ஜனாதிபதிக்குப் பாராட்டு

மகா சங்கத்தினரின் உபதேசங்கள் மற்றும் ஆலோசனைகளைச் செயற்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு பௌத்த ஆலோசனை சபை தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி பின்பற்றுகின்ற வழி முறைகள் சிறந்த மற்றும் நியாயமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்குக் காரணமாக அமையுமென்று ஆலோசனை சபையின் உறுப்பினர் நாயக்க தேரர் தமது நம்பிக்கையை வெளியிட்டார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) மாலை 6 ஆவது தடவையாகவும் ஜனாதிபதி அலுவலகத்தில் கூடிய பௌத்த ஆலோசனை சபையின் மூலம் இதுவரை முன்வைத்த ஆலோசனைகளைச் செயற்படுத்துதல் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டது.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த புராதன இடங்களைப் பாதுகாத்தல், குறைபாடுகளைக் களைந்து பிரிவொனா கல்வியின் மேம்பாட்டுக்கான செயற்பாடுகள், விகாரை காணிகளுக்கு சிக்கலற்ற பூஜா உறுதிப்பத்திரங்களை வழங்குதல், பௌத்த அறநெறிப் பாடசாலைக் கல்வி, தேசியக்கல்விக் கொள்கை, பாலர் அபிவிருத்தி, தேசிய பாதுகாப்பிற்கு முக்கியத்துவமளித்தல், போதைப்பொருள் தடுப்பு, சுற்றாடல் பாதுகாப்பு, சாசனத்தின் சிறப்பான செயற்பாட்டுக்கு வழிவகைகளைச் செய்தல், பௌத்த பல்கலைக்கழகங்களை கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவருதல் உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளுக்கு அரசாங்கம் தமது அவதானத்தை செலுத்தி செயற்படுத்துதல் தொடர்பாக மகா சங்கத்தினர் பாராட்டுக்களையும் ஆசீர்வாதத்தையும் தெரிவித்தனர்.



வரலாற்றில் முதற் தடவையாக நான்கு இராஜாங்க அமைச்சர்களின் கீழ் கல்வி அமைச்சை கொண்டு வந்ததன் மூலம் பலமிக்க மற்றும் நிலையான எதிர்கால கட்டமைப்பை தயாரிப்பதற்கு ஜனாதிபதி எடுத்த நடவடிக்கை ஆலோசனை சபையால் பாராட்டப்பட்டது.

தொல்பொருள் இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விகாரைகள் தொடர்பாக நீண்ட காலமாக நிலவி வருகின்ற பிரச்சினைகளைதீர்ப்பதற்காக தொல்பொருள் சட்டத்தை மறுசீரமைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் பலரின் பாராட்டை பெற்றுள்ளதாக மகா சங்கத்தினர் சுட்டிக்காட்டினர்.

மாதத்திற்கொரு முறை கூடுகின்ற ஆலோசனை சபையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டிய ஜனாதிபதி, தமக்கும் அதிகாரிகளுக்கும் பல்வேறு துறை சார்ந்த விடயங்கள் தொடர்பாக தெளிவுகளை பெற்றுக்கொள்வதற்குக் காரணமாக அமைந்ததெனவும் குறிப்பிட்டார். நிலவுகின்ற குறைபாடுகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

பௌத்த ஆலோசனை சபையின் உறுப்பினர்களான மகா சங்கத்தினர் மற்றும் ஜனாதிபதியின் பிரதம ஆலோசகர் லலித் வீரதுங்க, அமைச்சுக்களின் செயலாளர்கள், நிறுவனங்களின் பிரதானிகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.09.2020 இல் வெளியிடப்பெற்றது.